**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண். 82/2013**

2019-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ஆம் நாள் திங்கள்கிழமை வா.சா.1 (வாதி) (1969-ஆம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.R.நல்லதம்பி, மூன்றாம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர்செல்வம் | ஜாதி | : | |
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |

---

<u>வா.சா.1 (வாதி)-ன் முதல் விசாரணை...</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இவ்வழக்கின் வாதி. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 8.10.1956 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தந்தை தாவீது பெயரில் உள்ள கிரையப் பத்திரம் பதிவுத்துறை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. தாவா சொத்திற்கான வீட்டுவரி ரசீதுகள் அசல் எண்ணிக்கை-6 வா.சா.ஆ.2 (வரிசை 1-6). தாவா சொத்திற்கான எனது பெயரிலும், எனது சகோதரர் சின்னப்பன் பெயரில் உள்ள மனைவரி பட்டா எண்.1050 வா.சா.ஆ.3. தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு நான் கட்டிய குடிநீர் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை - 4 வா.சா.ஆ.4 (வரிசை 1-4). தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை-4 வா.சா.ஆ.5 (வரிசை 1-4). 28.7.1993 தேதியிட்ட என் தகப்பனார் தாவீது பெயரில் உள்ள வீட்டுமனை நீண்டகால அனுபோக உடைமைப் பத்திரம் அசல் வா.சா.ஆ.6. தாவா சொத்திற்கான நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1. தாவா சொத்திற்கான நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2. தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.